MJSSH Muallim Journal of Social Science and Humanities

**Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)**
**Volume 2- Issue 1 (2018), Pages 84-93 / ISSN: eISSN 2590-3691**

---

# பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் திரை இசைப் பாடல்களில் திருக்குறள் சிந்தனை

# THE THOUGHTS OF THIRUKKURAL IN PATTUKKOTTAI KALYANA SUNDARAM'S TAMIL MOVIES SONGS

**சுபாஷினி ஜெய்சீலன் [1] / Subahshini Jaiseelan [1]**
[1] ஜொகூர், மலேசியா. / Johor, Malaysia.
மின்னஞ்சல் / Email: ahshini09@yahoo.com

**Abstract**

'Thirukkural' is considered as the only book that is probably designed to be relatable to the lifestyle of all the occupants of Earth. The 'Thirukkural' book that has constantly portray wonderful and perplexing gist throughout time seem to be not thoroughly read and benefited by many anymore. With that said, this article concludes that the gist expressed in the Thirukkurals had seen reached many people in embedded forms, such as in poetries and songs. One of the best proof for such claims is in the lyrics of the movie songs by Pattukottai Kalyanasundaram. This article is written in order to find out how the 'Thirukkural' thoughts had been embedded in his lyrics. In the 133 chapters of 'Thirukkural', the thoughts related to 5 different themes such as indigestion, poverty, time recognition, refusal, and unity are where those thoughts were revealed. Kalyanasundaram had simplified those thoughts and embedded into the lyrics of the songs in a way that it makes the listeners ponder about it.

**Keywords**: Thirukkural, Pattukottai Kalyanasundaram, Tamil Movie, Lyric, Indigestion, Poverty, Time Recognition, Refusal, Unity

**ஆய்வுச் சாரம்**

புவிவாழ் மக்கள் அனைவரின் வாழ்க்கைக்கும் பொருந்தக்கூடிய வகையிலும் ஏற்றுக்கொள்ள கூடிய வகையிலும் அமைந்திருக்கும் ஒரே பொதுமறை நூல் திருக்குறள். எக்காலத்திற்கும் ஏற்புடைய வகையில் உள்ள பல அற்புதமான கருத்துகளின் ஊற்றாக விளங்கும் திருக்குறளினை முழுமையாக வாசித்து உய்த்துணர்ந்தவர்கள் மிக குறைவு. அவ்வாறு இருக்க திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகள் பல கவிதை வடிவங்களிலும் பாடல் வடிவங்களிலும் மக்களைச் சென்றடைகின்றன என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது. அதற்குச் சிறந்ததொரு சான்றாக விளங்குவது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின்

*திரையிசை பாடல் வரிகளாகும். இவரின் பாடல் வரிகளில் திருக்குறள் சிந்தனைகள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதைக் கண்டறியவே இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் இடம்பெற்றுள்ள 133 அதிகாரங்களில் நிலையாமை, வறுமை, காலம் அறிதல், புலால் மறுத்தல், ஒற்றுமை ஆகிய 5 அதிகாரங்களில் பதிவுச் செய்யப்பட்ட சிந்தனைகளைப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்திரம் தனது பாடல் வரிகளில் வெளிப்படுத்திய விதம் மிகுந்த எளிமையாகவும் அப்பாடலைக் கேட்போரின் மனதில் அச்சிந்தனைகள் நீங்காமிடம் பிடிக்கும் வகையில் அமைந்துள்ளன*

***கருச்சொற்கள்:*** *திருக்குறள், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், திரை இசை பாடல், நிலையாமை, வறுமை, காலம் அறிதல், புலால் மறுத்தல், ஒற்றுமை*

## *முன்னுரை*

*கி.பி 200 முதல் கி.பி 600 வரை சங்கம் மருவியக் காலம் எனப்படும். இக்காலக்கட்டத்தில் பல நீதி இலக்கியங்கள் தோன்றிய வண்ணம் இருந்தன. அவற்றுள், காலத்தால் முந்தியது எனவும் தன்மையால் தலைசிறந்தது எனவும் கூறப்படுவது உலகப் பொதுமறையான திருக்குறளே ஆகும். அத்திருக்குறளை இயற்றியவரின் இயற்பெயர் தெரியாதக் காரணத்தால் அப்பெருந்தகைக்குத் திருவள்ளுவர் எனப் பெயர் சூட்டப்பட்டது. இவர் தெய்வப்புலவர் என்றும் மக்களால் அழைக்கப்படுவார்.*

*அறநூல்கள் யாவும் குறிப்பிட்ட காலச் சமுதாயத்தை மையமாகக் கொண்டு அதன் முன்னேற்றம் கருதியே இயற்றப்பட்டவை அல்லது படைக்கப்பட்டவை ஆகும். ஆனால், திருக்குறளோ தனி மனிதனையும் அவன் குடும்ப வாழ்வையும் மையமாகக் கொண்டு எழுந்த இலக்கியமாகும். ஆகவேதான், எக்காலமானாலும் உலகில் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் பொறுந்தும் வகையிலும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது (மோகனராசு, 2012)[1].*

*இத்தகையச் சிறப்புகள் வாய்ந்த திருக்குறளைத் தமிழர்கள் யாவரும் கற்றுத் தெளிந்தனரா? என்றால் விடைக்காண முடியாத நிலையில் உள்ளோம். ஆனால், இதனை என்றுமே தெவிட்டாது தித்திக்கும் தன் கவிப்புலமை மூலம் திரை இசைப்பாடல்களின் வழி உலகத் தமிழர்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் என்றால் அது மிகையாகாது.*

*பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள சங்கம் படைத்தான் காடு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் தனது 19-ஆம் வயதிலேயே கவி புனைவதில் மிகுந்த பிடிப்புக் கொண்டவர். இவருடையத் திரையிசைப் பாடல்கள் அனைத்தும் கிராமியப்பண்ணில் அமைந்திருக்கும். அதுமட்டுமல்லாமல், இவரது பாடல்கள் யாவும் மக்களின் உணர்ச்சிகளை*

*வெளிப்படுத்தும் வகையில் அமையப்பெற்றிருக்கும். மேலும், சமுதாயத்தில் காணப்படும் நிறைகளையும் குறைகளையும் துணிச்சலாகவும் தெளிவாகவும் எந்தவொரு ஒளிவுமறைவும் இல்லாமல் தன் பாடல்கள் மூலம் மக்களுக்கு சொன்னவர் மக்கட்கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் (சோதிநாதன், 2008)*[2].

*இவரின் திரையிசைப் பாடல்கள் அனைத்தும் இயற்கை, சிறுவர், காதல், மகிழ்ச்சி, சோகம், நகைச்சுவை, நாடு, சமூகம், அரசியல், தத்துவம், பாட்டாளிகளின் குரல், இறைமை போன்ற கருப்பொருள்களைக் கொண்டு இயற்றப்பட்டவை ஆகும். இவ்வாறு இருக்க, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் தன் பாடல் வரிகளில் திருக்குறள் சிந்தனையை மக்களுக்குத் தெவிட்டாத வகையில் இணைத்துள்ளார். அத்தகையப் பாடல்களில் சிலவற்றை காண்போம்.*

## திருக்குறள் சிந்தனை

### *நிலையாமை*

*எது நிலையாமை? ஆதியும் அந்தமும் இல்லா இறைவனைத் தவிர மற்ற அனைத்துமே நிலையாமை வகையைச் சாரும். அதிலும், குறிப்பிட்டுச் சொல்லப்படுவது செல்வம், இளமை, யாக்கை ஆகிய மூன்றும் ஆகும். இம்மூன்றும் இப்புவி வாழ்வில் நிச்சயம் ஒரு நாள் தன் இயல்பிலிருந்து மாற்றம் காணக்கூடியவை. மனிதனின் பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய இரண்டு சம்பவத்திற்கும் இடைப்பட்டக் காலத்தில் அவனை ஆட்டிப்படைப்பது ஆசை, பாசம், நேசம் போன்ற உணர்ச்சிகளின் வெளிப்பாடே ஆகும். பிறப்பு மற்றும் இறப்புச் சம்பவம் என்று கூறுவது ஏனெனில், அவை இரண்டும் நிகழும் காலம் இன்று மட்டுமல்லாமல் என்றுமே யாவரும் அறியாத ஒன்றாகும். இவ்வாறு இருக்க, பகுத்தாராயக்கூடிய அறிவைப் பெற்றிருந்தாலும் மனிதன் என்பவன் நிலையாமையை எனும் இருட்டிலிருந்து வெளிவர மறுக்கிறான் (மோகனராசு, 2012)*[1]. *ஆகையால், நிலையாமை எனும் இருட்டை நம்மிடையே விலக்க வேண்டி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் தமது பாடல் வரிகளை இவ்வாறு தொடுத்துள்ளார்.*

*உனக்கெது சொந்தம்*
*எனக்கெது சொந்தம்*
*உலகத்துக்கெது சொந்தமடா…"*

*"நேசம் பாசம் பொருளாசைக் கெல்லாம்*
*காட்டிய ஒருபிடி வாய்க் கரிசியிலே*
*கணக்கத் தீர்த்திடும் சொந்தமடா …*

*(பாசவலை, 1956)*

இப்பாடல்வரிகளின் வழி, இப்புவியில் மானிடனாய்ப் பிறப்பெடுத்த உனக்கு நிலையான சொந்தம் என்று சொல்லக்கூடியது எதுவுமே இல்லை. அதே போல, எனக்கும் இறுதிவரை ஒன்றைச் சொந்தம் என்று சொல்லிக்கொள்ள எதுவும் இல்லை. உலகிற்கும் எதுவும் சொந்தமில்லை. ஆக, இப்பொழுது நாம் பார்க்கின்ற, தொடுகின்ற, இரசிக்கின்ற அனைத்துமே நிலையானது அல்ல. இன்று நமக்கென இருப்பது நாளை வேறொருவருடையதாகிறது. மேலும், நேசம், பாசம், செல்வம் ஆகியவை எல்லாம் உயிர் உடலோடு இணைந்து இருக்கும் வரைதான், என்று உடலை விட்டு உயிர் பிரிகிறதோ அடுத்த கனமே இவை அனைத்தும் மறைந்துபோகக் கூடிய மாயை. இதைத்தான் வள்ளுவரும் தனது குறளில்,

*நெருநல் உளனொருவன் இன்றுஇல்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் உலகு*

*(குறள் 336)* [4]

அதாவது, நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் பெரிய இயல்பை உடையது இவ்வுலகம் என்கிறார். இவ்வாறு இருக்க, நிலையில்லாத இவ்வுலக வாழ்க்கையில் பிற உயிர்களுக்கு அறம் செய்வதை விடுத்து அழிந்து போகக்கூடிய பலவற்றை ஈட்டுவதில் தான் இன்றைய கால மக்கள் முக்கியத்துவம் காட்டுகின்றனர் (திருப்பனந்தாள், 1968)[3].

மேலும், வள்ளுவர் இயற்றிய,

*நில்லாத வற்றை நிலையின என்றுணரும்*
*புல்லறி வாண்மை கடை*

*(குறள் 331)* [4]

எனும் திருக்குறள் சிந்தனையைத் தனது பாடல்வரிகளில் புகுத்தியுள்ளார் மக்கட்கவிஞர் அவர்கள்.

*பணக்கிறுக்குத் தலையிலேறிப்*
*பகுத்தறிவுந் தேயுது - இந்த*
*பாழாய்ப்போற மனிதக்கூட்டம்*
*தானாய் விழுந்து மாயுது"*

*(பாசவலை, 1956)*

அதாவது, நிலையில்லாதவைகளை நிலையானவை என்று கருதுகின்ற அற்ப அறிவு இகழத்தக்கது எனும் திருக்குறள் சிந்தனையை மேற்கண்ட பாடல் வரிகள் ஏற்று வந்துள்ளதைக் காணலாம். இன்று நாட்டில் இருக்கக்கூடிய பெரும்பாலானோர் மேற்கண்ட வரிகளுக்கேற்பவே வாழ்கின்றனர். நிலையில்லாத செல்வத்தினைத் திறட்டும் நோக்கில் நிலைத்து இருக்கக்கூடிய பல அறச்செயல்களைச் செய்ய தவறுகின்றனர். இச்சிந்தனை போற்றுதற்குரியது அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

**வறுமை**

பணம், கல்வி, உணவு, ஆடை போன்ற மனிதனின் அத்தியாவசியத் தேவைகளுக்கே தட்டுப்பாடு உள்ள நிலைதான் வறுமையாக இன்று விளங்குகிறது. இவற்றுள் பணம் என்பது மனிதனின் இன்றைய வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்று இவ்வுலக மக்கள் யாவரும் பணம் என்ற ஒன்றிற்காகத்தான் அல்லும் பகலும் பாடுபடுகின்றனர். இன்று பணம் என்பது அதிகம் கொண்டிருப்பவரையும் ஆட்டிப்படைக்கின்றது; இல்லாதவரையும் ஆட்டிப்படைகின்றது. இஃது இருப்பவனை ஒன்றும் இல்லாதவனாக மாற்றும், இல்லாதவனை ஒரு நொடியில் எல்லாமுமாகவும் மாற்றவள்ளது. இத்தகையத் தன்மையைக் கொண்ட பணத்திற்குப் பற்றாக்குறை ஏற்பட்டுத் தனது ஆயுளை முக்கால்வாசி துன்பத்திலேயே கழிக்கும் ஏழைகள் பலர். அவ்வாறு வறுமையில் வாடும் ஏழைகளின் மனக்குமுறலைத் தனது பாடல்வரிகளில் கூறியுள்ளார் மக்கட்கவிஞர் அவர்கள்.

*ஒன்னுக்குப் பத்தா செல்வத்தைப் படைச்சான்*
*உலகம் நிறைய இன்பத்தைப் படைச்சான்*
*என்னைப் போலே பலரையும் படைச்சு –*
*அண்ணே*
*இதுக்கும் அதுக்கும் ஏங்க வைச்சான்*
*ஏழையைக் கடவுள் ஏன் படைச்சான்?*
*(இரும்புத்திரை. 1960)*

மேற்கண்ட பாடல்வரிகள் மூலம், வறுமையில் வாழ்பவனது மனநிலை எத்தகைய துன்பத்திற்கு உட்பட்டதாய் இருக்கும் என அறிய முடிகிறது. மாதம் 30 நாட்கள் முழுக்க உழைத்து, சரியான உணவு இல்லாமல், தன் உடலை வருத்தி பணத்தை ஈட்டினால் கடன்காரன் வந்து அனைத்தையும் சுரண்டிக் கொண்டு சென்று விடுவான். உலகில் செல்வத்தையும் இன்பத்தையும் நிறைய படைத்த இறைவன் தன்னைப்போல ஏழையையும் படைத்து அவை அனைத்திற்கும் ஏங்க வைத்தது ஏன்? என்ற ஏழையின் மனக்குமுறலைப் பிரதிபலிக்கும் வகையிலே இப்பாடல்வரிகள் அமைந்துள்ளன.

இதையே திருவள்ளுவர்,

*இன்மையின் இன்னாத்து யாதுஎனின் இன்மையின்*
*இன்மையே இன்னா த்து*
*(குறள் 1041)*[4]

*நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்*
*துன்பங்கள் சென்று படும்*
*(குறள் 1045)*[4]

எனக் கூறியுள்ளார். 1041-ஆவது குறளின்படி வறுமையைவிட கொடியது வறுமையே ஆகும் எனவும், 1045-ஆவது குறளின்படி வறுமை என்னும் துன்ப நிலையில், பல்வேறு துன்பங்கள் வந்து சேரும் எனவும் பொருள்படும். வறுமை என்பதே கொடியது. அத்தகைய கொடிய நிலையில் பல்வேறு துன்பங்களை ஏழைகள் சந்திப்பர் என்று மேற்கண்ட பாடல்வரியின் வழி அறிய முடிகிறது. விருப்பப்பட்டப் பொருட்களைக்கூட வாங்க முடியாத நிலையில், கண்ணில் ஏக்கத்தையும் நெஞ்சில் பாரத்தையும் சுமந்து தங்களது வாழ்வினை வாழ்கின்றனர் ஏழைகள் (கார்த்திகேஸ் பொன்னையா &கிங்ஸ்டன் பால் தம்புராஜ், 2017)[5].

ஆனால், தற்போதையக் காலகட்டத்தில் ஏழையாக இருப்பவர்களில் பலர் தனது முன்னேற்றத்திற்காக பாடுபடுவது குறைவு. அவர்கள் மனது வைத்தால் தங்களின் விடாமுயற்சியால் வாழ்க்கையில் முன்னேறலாம். இருப்பினும், தங்களுக்குள் இருக்கும் தாழ்வு மனப்பான்மையால் முன்னேற்றத்திற்கான எந்தவொரு புதிய முயற்சியையும் மேற்கொள்ள மறுக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும் என்பதே திருவள்ளுவரின் எண்ணமாகும்.

**சோம்பல், காலம் அறிதல்**

*நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்*
*கெடுநீரார் காமக் கலன்'*

*(குறள் 605 )*[4]

எனும் திருக்குறள், எதையும் காலம் கடந்து செய்யும் போக்கு, மறதி, சோம்பல், மிகுந்த தூக்கம் என்னும் நான்கும் கெட்டுப்போவார் விருப்பத்தோடு பூட்டிக் கொள்ளும் அணிகலன்கள் என்று பொருள் தருகின்றன. இத்திருக்குறள் சிந்தனையைக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல் வரிகளில் காணலாம்.

*நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்*
*நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்...*
*(நாடோடி மன்னன், 1958)*

நேரம் பொன் போன்றது. அத்தகைய நேரத்தை நல்ல செயல்களைச் செய்வதற்குப் பயன்படுத்துவதை விடுத்து வீணே தூங்கி கழிப்பவர்கள் பலர் இன்னும் இப்புவிதனில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். மேற்கண்ட வரிகள் நேரத்தை ஒரு பொருட்டாக மதியாமல், சோம்பலின் காரணமாகக் கொடுத்தப் பணியினைச் செவ்வனே செய்து முடிக்காமல், காலம் கடத்தி பின் அரக்கப்பரக்க வேலை செய்யும் போக்கை உணர்த்துகிறது. இதனால், நாம் காலத்தாலும், அறிவாற்றலாலும், அனுபவத்தாலும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகிறோம் என்பதை உணராதவர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு நொடிகளிலிலும், நம்மைச் சுற்றியுள்ள சின்ன சின்ன விஷயங்களும் பெரிய பெரிய மாற்றங்களையும் அதற்கேற்ற விளைவுகளையும் தரவல்லது என்பதை நாம் உணர வேண்டும்.

*பள்ளியில் தூங்கியவன் கல்வியிழந்தான்...*
*இன்னும் பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் – பல*
*பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா"*
*(நாடோடி மன்னன், 1958)*

மேற்கண்ட வரிகளில் தூக்கம் எனப்படுவது கண்களை மூடி உறங்குவதைக் குறிக்கவில்லை. மாறாக, தங்களின் கடமைதனில் தூங்கியவர்களைக் குறிக்கின்றது. இவ்வுலகில் பிறந்த மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கென்று உரிய கடமைகள் உள்ளன. மாணவர்களுக்குக் கல்வி கற்பது கடமை, ஆசிரியர்களுக்குப் பாடம் போதிப்பது கடமை, தாய் தந்தையர்க்குக் குடும்பத்தைச் சரிவர பேணுவது கடமை. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கென உரிய கடமைகள் இருக்கும். ஆனாலும் சிலர், தங்களின் கடமைகளின் மீது சிறிதும் விழிப்பு இல்லாமல் அலட்சியமாக இருப்பது துன்பத்திற்கான விளைவுகள் பலவற்றை அளிக்கும். மேற்கண்ட பாடலில் இறுதிவரி, இவ்வாறு பொறுப்புணர்ச்சி குன்றிய சில அலட்சிய மனிதர்கள் தங்களின் கடமைகளில் தூங்குவதால் அதைச் சார்ந்தப் பல வேலைகள் நிறைவுபெறாமல் இருக்கின்றன என்று பொருள்படுகிறது. இதைதான் வள்ளுவரும் தனது குறளில் இவ்வாறு கூறுகிறார்.

*பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்*
*தீராமை ஆர்க்கும் கயிறு*
*(குறள் 482 )*[4]

*எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற்கு அரிய செயல்*
*(குறள் 489)*[4]

காலத்தோடு பொருந்தி வினையாற்றுவது, உள்ள செல்வத்தை நீங்காமல் கட்டும் கயிறாகும். மேலும், கிடைத்தற்கு அரிய காலம் வாய்த்த பொழுது தவறாமல் செய்வதற்கு அரிய செயலைச் செய்ய வேண்டும். அப்படியில்லையெனில், காலம் கடந்தபின் இழந்ததை நினைத்து வருந்த முடியுமே தவிர அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை நிவர்த்தி செய்வது என்பது கடினமான ஒன்றாகும்

**கொல்லாமை மற்றும் புலால் மறுத்தல்**

எந்தவொரு உயிரையும் கொல்லக்கூடாது என்பது கொல்லாமை. மனிதனை மட்டுமல்லாது விலங்குகளையும் ஊனப்படுத்தாமல் இருப்பது மற்றும் வதைக்காமல் இருப்பதும் கொல்லாமையே. ஆனால், இன்றோ மனிதர்கள் தங்களின் தேவைக்காக இப்புவியில் வாழும் பல உயிர்களை வதைக்கின்றனர்; கொல்கின்றனர். உதாரணத்திற்கு, மனிதன் தனது பசியை ஆற்றுவதற்காகச் பிற உயிர்களைப் பலியிடுகிறான். பிற உயிர்களுக்கும் உணர்வுகள் உணர்ச்சிகள் என அனைத்தும்

*இருக்கின்றனர். அவ்வகையில், அவற்றை யாவும் கருத்தில் கொள்ளாமல் அவ்வுயிர்களை கொன்று உண்பவர்களான இத்தகைய இரக்கமற்ற குணத்தினரை நோக்கி மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் தன் பாடல் வரியில் இவ்வாறு எழுதியுள்ளார்.*

*இரைபோடும் மனிதருக்கே*
*இரையாகும் வெள்ளாடே…*
*காலொடிந்த ஆட்டுக்காக் கண்ணீர் விட்ட புத்தரும்*
*கடல் போல் உள்ளங்கொண்ட காந்தி ஏசுநாதரும்*
*கழுத்தறுக்கும் கொடுமை கண்டு*
*திருந்தி வாழ சொன்னதும் உண்டு*
*காதில் மட்டும் கேட்டு அதை ரசித்தாங்க – ஆனா*
*கறிக்கடையின் கணக்கை பெருக்கி வந்தாங்க*

*மேற்கண்ட வரிகள் தானே இரைப் போட்டு வளர்த்து வந்த ஆட்டின் பசியை ஆற்றி இறுதியில் தன்னுடைய பசியை ஆற்ற வேண்டி அதே ஆட்டைப் பலியிட்டது எத்தகைய கொடுமையான குணம் என்று பாடியுள்ளார். இதைத்தான் வள்ளுவரும் தன் குறளில் இவ்வாறு கூறியுள்ளார்.*

*அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்*
*பிறவினை எல்லாம் தரும்"*
*(குறள் 321)*[4]

*தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்?*
*(குறள் 251 )*[4]

*ஆனால், தற்போதைக் காலகட்டத்தில் புலால் மறுத்தல் என்பது நடைமுறைக்குச் சாத்தியப்படாத ஒன்றாக இருக்கிறது. ஏனெனில், இன்று புலால் உண்ணாதவர்கள் மிகச்சிறிய குழுவினராகவே இருக்கின்றனர். அவர்களுள் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு புலால் மறுப்பவர்கள் பலர். அவர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் புலால் உண்கின்றனர். மேலும், விழாக்காலங்களிலும் வழிப்பாட்டு நாட்களிலும் மட்டுமே புலால் உண்பதைத் தவிர்க்கின்றனர். அதுவும் சிலர் மட்டுமே. ஆகையால், திருவள்ளுவரின் இக்கூற்று இன்றைய நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்க முடியாத ஒன்றாக இருப்பது சிறிய வருத்தத்தை அளிக்கிறது (Kartheges Ponniah, 2017)*[6]*. இருப்பினும், வள்ளலாரைப் போன்று 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற உணர்வோடு வாழாவிட்டாலும், எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாமல் இருப்பதே நன்று.*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 84-93 / ISSN: eISSN 2590-3691

**ஒற்றுமை**

ஒற்றுமை என்பது மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமான ஒன்றாகும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமையில்லா குடும்பம் ஒருமிக்க கெடும் என்றெல்லாம் ஒற்றுமையை ஒட்டி பல பழமொழிகள் தமிழில் உள்ளன. ஆனால், இன்றைய சூழ்நிலையில் ஒற்றுமை என்பது வெறும் ஏட்டுகளிலோ அல்லது பாடல்களிலோ மட்டுமே காணவும் கேட்கவும் முடிகிறதே தவிர நடைமுறை வாழ்க்கையில் ஒற்றுமையாக ஒருவருடன் ஒருவர் பழகுவது என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கிறது. சான்றாக, பட்டுக்கோட்டையாரும் மனித ஒற்றுமையை வலியுறுத்திப் பாடல் புனைந்துள்ளார்.

*அண்ணன் தம்பியாய்*
*அனைவரும் வாழ்ந்து*
*அருள் விளக்கேற்றிடுவோம்!*

*... ஒற்றுமையில்லா மனிதகுலம்*
*உயர்வும் தாழ்வும் வளர்க்குது*

திருவள்ளுவரும் இதையே தன் குறளிலும் இயற்றியுள்ளார்.

*அமைந்துஆங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை*
*வியந்தான் விரைந்து கெடும்*

*(குறள் 474)* [4]

மேற்காணும் இக்குறள், பிறரோடு ஒத்து வாழாமல் தன்னைப் பெரிதாக நினைத்துக் கொள்பவன் விரைவில் கெடுவான் எனப் பொருள்படுகிறது. ஆகவே, பட்டிக்கோட்டையரின் பாடலைப் போல இக்குறளும் ஒற்றுமையில்லாமல் தன்னில் யார் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று மனிதனுக்கு மனிதன் ஒரு ஆரோக்கியமற்ற நிலையைத் தன்னைச் சுற்றி தானே உருவாக்கிக் கொள்கிறான். இதனால், தனி மனிதன் மட்டுமல்லாது ஒரு சமுதாயமே கூட பாதிக்கக்கூடியதாக அமைகிறது. அதாவது, ஒரு செயலையோ அல்லது ஒரு முடிவையோ செயல்படுத்தும்போது ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டால்தான் அதன் விளைவுகள் நன்மையில் முடிவுறும்.

ஆனால், தற்போதையக் காலகட்டத்தில் ஒற்றுமை என்பது நாளுக்கு நாள் மனிதர்களிடையே குறைந்து கொண்டே போகும் ஒரு குணமாக இருக்கிறது. சான்றாக, ஒரு நாட்டினர் தனது பகை நாட்டின் மீது வெடிகுண்டுகள் போடுவது, துப்பாக்கியால் தன்னைப் போன்றே இன்னொரு மனிதைச் சற்றும் ஈவிரக்கம் இன்றி சுட்டுக் கொள்வது எனப் பல கொடூரச் செயல்களைச் செய்து கொண்டுதான் இருக்கின்றனர். ஆகவே, மனிதர்களாகிய நாம் பழிவாங்கும் உணர்ச்சிகல்லயெல்லம் உடைத்தெறிந்துவிட்டு அனைவரிடமும் ஒற்றுமையாகப் பழக வேண்டும். இவ்வாறு செய்வதன் வழி மனித குலம் ஒரு நல்ல முன்னேற்றைத்தையும் சிந்தனையையும் கொடுக்கவல்லது என்பது உண்மையான கூற்றாகும்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 1 (2018), Pages 84-93 / ISSN: eISSN 2590-3691

## முடிவுரை

ஆகவே, மக்கட்கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் மொத்த சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் ஏற்றதக்க பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். இவரின் பாடல்களில் திருக்குறள் சிந்தனைகள் பலவற்றையும் நாம் காணலாம். இப்பாடலைக் கேட்பதுவும் திருக்குறளைப் படிப்பதுவும் மட்டுமே இருந்துவிடாமல் நடைமுறை வாழ்விற்கும் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் இந்நற்சிந்தனைகளை அமல்படுத்துவதனால் ஒரு நெறியான வாழ்க்கை வாழ்வதோடு தனிமனிதனையும் ஒரு சமுதாயத்தையும் நல்ல முறையில் முன்னேற்றவும் செய்யலாம்.

## மேற்கோள் நூல்கள்:


1. Moganarasu. (2012). *Thirukkural people text (திருக்குறள் மக்கள் உரை).* Chennai: Manivasagar Printers.
2. Sothinathan, A. (2008). *Paddukkotai Kalyana Sundaram (பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்).* Kuala Lumpur: Uma Publication.
3. Thirupananthal. (1968). *Parimelalagar Thirukkural description (பரிமேலழகர் திருக்குறள் தெளிவுரை).* Kasimadam: Thirukkural Foundation.
4. Varatarasan, M. (2000). *Thirukkural (திருக்குறள்).* Thirunelveli: Saiva Siddhanntha Publication.
5. Kartheges, P. & Kingston Pal Thamburaj. (2017). *Human personality in Thirukkural (திருக்குறள் உணர்த்தும் மனித ஆளுமை).* Literature and Science Social. Malaysia: Tamil Linguistic Assentation of Malaysia.
6. Kartheges, Ponniah (2017) *Pemikiran kritis dan amalannya dalam masyarakat India berpendidikan Tamil di Malaysia berpandukan teks Thirukkural.* Kuala Lumpur: University of Malaya.